**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 589/2025**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மெகராஜ்பானு** | **Caste** | : | |
| **Husband's Name** | : | அப்துல்மாலிக் | **Calling** | : | **இல்லத்தரசி** |
| **Village** | : | **தோமையார்புரம்** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **33** |
| | | | **Dated** | : | **12.11.2025.** |

**12.11.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி 3– திருமதி. **மெகராஜ்பானு** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

1. நான் திண்டுக்கல் தோமையார்புரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 கணவாய்பிச்சை எனது அப்பா. இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த நாகூர்அம்மாள் எனது அத்தை. கடந்த 18.11.2024 ம் தேதி நான் எனது அம்மா ஹ யர்நிஷா மற்றும் நாகூர்அம்மாள் ஆகியோர் காலை சுமார் 8

மணிக்கு எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் இருக்கும் குழாயில் தண்ணீர் பிடித்து கொண்டிருந்தோம். மேற்கிருந்து கிழக்கு நோக்கி மகேந்திர ஸ்கூல் வேன் வேகமாக எங்களை கடந்து சென்றது. அந்த வேன் போன வேகத்தில் வேகமாக ரிட்டன் வந்தது. அதன் ஓட்டுநர் அஜாக்கிரதையாக முன்னாள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நாங்கள் இருந்ததை கவனிக்காமல் வந்தார். அப்போது வேகமாக வந்து நாகூர் அம்மாள் மீது மோதிவிட்டது. அதில் நாகூர் அம்மாளுக்கு தலை முகம் ஆகிய இடங்களில் இரத்த காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிதான் அந்த ஸ்கூல் வேனை ஓட்டிய நபர் ஆவார். அவரை நான் சம்பவ இடத்திலே பார்த்தேன். அவரை பற்றி அவரிடம் சம்பவ இடத்தில் விசாரித்த போது அவர் பெயர் பிழவேந்திரன் என்றும் அவரை பற்றிய விவரங்களையும் கூறினார். இந்த தகவலை நான் எனது அம்மா எனது அப்பாவிற்கு போன் மூலமாக தெரிவித்தார். எனது அப்பா சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். நாங்கள் அவரிடம் நடந்த சம்பவத்தை கூறினோம். பின்னர் தனியார் ஆம்புலன்சில் காயம் பட்ட நாகூர்அம்மாளை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே அவர் இறந்து விட்டதாக சொன்னார்கள். நானும் எனது அப்பாவும் புகார் கொடுப்பதற்காக தாலுகா காவல் நிலையம் சென்றோம். நான் சம்பவத்தை பார்த்ததை வைத்தும் எனது அப்பா சொன்னதை வைத்தும் புகாரை எழுதினேன்., எனது அப்பா அதை படித்து பார்த்து கையெழுத்து போட்டார். புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை–இல்லை</u>

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.11.13 10:14:05 +0530

Judicial Magistrate No.I

Dindigul.